1967 ஜூலை 27

திரு ந. தருமலிங்கம் : தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யத்தில் ஒரு டெப்டி தாசில்தார்தான் இருக்கிறார். அங்கே ஒரு துணைக் கருவூலம் அமைக்கவேண்டும் என்று நீண்ட காலமாக அரசாங்கத்திற்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதை உடனடியாக அமைக்கிற எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா?

மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை : இந்தக் கேள்வி பள்ளிப் பட்டில் துணைக் கருவூலம் அமைப்பது பற்றியது. ஆகவே, இதனுடைய தொடர்பாக வேறு கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வி பள்ளிப் பட்டில் துணைக் கருவூலம் அமைப்பது பற்றியது. கனம் உறுப்பினர்கள் அதுபற்றி கேள்விகள் கேட்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : In view of the local importance of this question, will the Government take up for consideration the construction of office buildings at least for the independent Deputy Tahsildar ?

THE HON. THIRU C. N. ANNADURAI : Even without local importance the question assumes importance because of the importance of the hon. member. But financial considerations only refrain us from taking up that matter.

கல்லூரிக் கட்டடங்கள்.

*** 144 வினா—திரு மா. பா. சாரதி :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேலூர் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடங்கள் கட்டுவதற்கு நிலம் வாங்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது கட்டடங்கள் கட்டி முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) அதிக அளவில் முதலீடு செலவுகளை, தவிர்க்கும் பொருட்டு இந்த வேலையைத் தற்போது எடுத்துக் கொள்ள உத்தேசம் இல்லை.

*** 145 வினா—திரு. மா. பா. சாரதி :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேலூர் முத்துரங்கம் அரசினர் கலைக் கல்லூரிக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கான நிலம் வாங்கப்பட்டுவிட்டதா?

(இ) ஆம் எனில், கட்டடங்கள் எப்பொழுது கட்டப்படும்?

(உ) அதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள செலவுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இந்த வேலையை நடப்பு ஆண்டிலேயே துவக்க உத்தேசிக்கப்பட்டு இருக்கிறது.

(உ) ரூ. 8.50 லட்சம்.

திரு. ரா. ரா. முனுசாமி : வேலூர் முத்துரங்கம் அரசினர் கலைக் கல்லூரிக்கு நிரந்தரமான கட்டடங்கள் கட்டுவதற்கு நிலம் வாங்கப்பட்டதா? ஆமெனில், எப்பொழுது கட்டடம் கட்டி முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : விரிபாட்சிபுரத்தில் 37.32 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு 26—12—1966-ல் முதல்வரிடம் ஒப்படைக்கப்பட்டது. கட்டடம் கட்டுவதற்கு எட்டு லட்சத்து ஐம்பதிஞயிரம் ரூபாய ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் கட்டடம் கட்டுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த ரூ. 8½ லட்சம் இப்பொழுது வசூல் ஆகியுள்ளதா அல்லது சர்க்கார் கட்டடத்திற்காக ஒதுக்கியுள்ளதா? அப்படியில்லையென்று சொன்னல் இப்பொழுது வரையில அதற்கான பணம் எவ்வளவு உள்ளது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அரசாங்கம் கட்டடத்திற்காகப் பணம் ஒதுக்குவது என்ற முறையில் ரூ. 8½ லட்சம் கல்லூரி கட்டடத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

புதை சாக்கடைத் திட்டம்.

*** 146 வினு—திரு. ஆ. கு. சுப்பையா:** மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) திருச்சி நகரத்திற்கு, பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற அரசாங்கத்திடமிருந்து நிதி உதவி கோரிஞர்களா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) திருச்சிராப்பள்ளி வடிகால் திட்டத்தைப் புலனய்வு நடத்துவதற்கு அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது. இன்னும் புலனய்வு வேலைகள் முடிவு பெறவில்லை. திருச்சிராப்பள்ளி நகராட்சி மன்றம் வடிகால் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு நிதியுதவி அளிக்குமாறு கேட்டுள்ளது. புலனய்வு வேலைகள் முடிந்து வரைவு மதிப்பீடுகள் வந்ததும் நிதியுதவி அளிப்பது குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ஆ. கு. சுப்பையா : திருச்சிராப்பள்ளி நகர சாக்கடை வடிகால் திட்டத்தை நிறைவேற்றியாகவேண்டும் என்று கடனகவோ அல்லது மான்யமாகவோ உதவி கேட்டார்கள். அது பற்றிய பரிசீலனை இந்த ஆண்டே முடிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : முதல் அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வரவேற்பில் 3—4—1967 அன்று திருச்சி நகரமன்றம் அரசாங்கத்தினிடமிருந்து நிதி உதவி கேட்டிருக்கிறது. அதுபற்றி பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆர். நாகசுந்தரம் : 20 ஆண்டு காலமாக காங்கிரஸ் சர்க்கார் மத்தியிலும், மாநிலத்திலும், நகராட்சி மன்றங்களிலும் இருந்தும், இது போன்ற பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படாததற்கு என்ன காரணம் என்று இந்த அரசினருக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கடந்த அரசாங்க நடவடிக்கைகள் பற்றி இப்பொழுது ஒன்றும் சொல்வதற்கில்லை. இனிமேல் இதுபற்றிய விவரங்கள் தீவிரமாக கவனிக்கப்படும்.

திரு. எம். பூபதி : சுகாதாரத்தை பேணிப் பாதுகாக்க உதவும் கீழ் சாக்கடைத் திட்டத்தை 50 ஆயிரமும் அதற்கும் அதிகமான பேர்கள் ஜனத்தொகை கொண்ட நகராட்சி மன்றங்களுக்கு விஸ்தரிப்பதுபற்றி சர்க்கார் யோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் திட்டத்தை நகராட்சிமன்றங்களுக்கு விஸ்தரிக்க சர்க்கார் மிகவும் ஆவலோடு இருக்கிறது. நிதிப் பற்றுக்குறையின் காரணமாகத்தான் இது தற்பொழுது பரிசீலனை செய்ய முடியாத நிலையில் இருக்கிறது.